

# வாரந்தோறும் ஒரு தீபம்!

## உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

(வியாழன்தோறும்)

| 06.10.2022 | 10. 'கானாவூர் அற்புதம்' நம் வீட்டிலும் சபையிலும் நிகழ்வதாக! |
|---|---|



உங்கள் வீடோ அல்லது கானாவூர் பொதுஇட கூடுகையோ "கொஞ்சம் கோபப்படாமல் இருக்ககூடாதா? ஏன் இந்த முறுமுறுப்பு? சாந்தம் இல்லையே!" என்றெல்லாம் அவலக்குரல் தொனிக்கிறதே? நீங்கள் முறையிட்ட நபரிடமிருந்து ஓர் குரல் தொனிப்பதை 'இன்றாவது' உற்று கேளுங்கள்: "கொஞ்சம் என்னிடம் பொறுமையாய் இருங்கள்! என் வேளை இன்னமும் வரவில்லை! உங்களுக்கு ருசியில்லாத என் கோபத்தை, முறுமுறுப்பை இயேசுவுக்கு முன்பாக ஊற்றிக் கொண்டுதான் இருக்கிறேன்..... ஆ, இப்போது பார்த்தீர்களா? சாந்தமும், அன்பும் பரத்திலிருந்து வந்து எனது ருசியில்லா தண்ணீரை, மிகுந்த ருசியான திராட்ச ரசமாய் மாற்றிவிட்டதே! (ரோமர் 5:5). இந்த வேளை வருவதற்கு, நீங்கள் பொறுமையாய் காத்திருந்ததற்கு நன்றி!" என்ற குரல் உங்கள் வீட்டிலும், கூடிவந்த நண்பர்கள், உறவினர்கள் மத்தியிலும் எதிரொலிப்பதை காண்பீர்கள்!

இவ்வாறாக "இயேசுவின் மகிமை வெளிப்படும்" அன்பின் ஆரவார மகிழ்ச்சி உங்கள் வீட்டிலும், நண்பர்கள் உறவினர்கள் மத்தியிலும் மாத்திரமல்ல, உங்கள் சபையிலும் தொனிப்பது சாத்தியமே என மனதார விசுவாசித்து வாழுங்கள்! (யோவான் 2:11) அல்லேலூயா.

– ரத்னம்